1996 பிப்ரவரி 22]

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓசூர் பகுதி, தொழிற்சாலைகள் அதிகம் நிரம்பிய பகுதியாகும். அங்கு வேலை பார்க்கச் செல்லும் மாணவர்கள் புதிய இயந்திரங்களை இயக்குகின்ற அளவில், புதிய வகையில் பயிற்சி கொடுக்கின்ற அளவுக்கு மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சி.எம்.சி. இயந்திரத்தை வாங்குவதற்காக ரூபாய் 32 லட்சம் நிதி உதவி அளித்திருக்கிறார்கள் என்று சொன்னேன். இருந்தாலும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுடைய வினாவை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண்.92, திரு. ஏ.கே.சி. சுந்தரவேல், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர்.

92—

கட்டிடத் தொழிலாளர்களுக்கு உதவி

****47982*—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கட்டிடத் தொழிலாளர்களுக்கு விபத்து ஏற்பட்டால் உதவிப் பணம் வழங்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கட்டிடத் தொழிலாளர்களுக்குப் பணியிலிருக்கும்போது விபத்து ஏற்பட்டால் உதவிப் பணம் வழங்கப்படுகிறது.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கட்டிடத் தொழிலாளர்களுக்கு விபத்து ஏற்பட்டால் உதவித் தொகை எவ்வளவு வழங்கப்படுகிறது? குறைந்தபட்சம் எவ்வளவு? அதிகபட்சம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் ஒப்பற்ற தலைவி, சமூக நீதிகாத்த வீராங்கனை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில்தான் முதன் முதலாக கட்டிடத் தொழிலாளர்களுக்காக தமிழ்நாடு உடல் உழைப்போர் தொழிலாளர்கள் நலத் திட்டம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

உருவாக்கப்பட்டு 1-11-1994 முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது. தனியாக ஒரு வாரியமும் அமைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்படி, சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய மாநகரங்களில் தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருக்கும் போது விபத்து ஏற்பட்டு, இறந்தால் ரூபாய் 50 ஆயிரம் இழப்பீடு தரப்படுகிறது. இந்தியாவில் இப்படி ரூபாய் 50 ஆயிரம் வழங்கப்படுவது, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் மட்டும் தான் என்பதை தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். உடல் ஊனம் அடைந்தால் இழப்பின் தன்மைக்கு ஏற்ப உதவித் தொகை வழங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே.பி. ராஜு.

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கட்டிடத் தொழிலாளர்கள் வேலை செய்யும்போது இறந்து விட்டால் 50 ஆயிரம் ரூபாய் புரட்சித் தலைவியினுடைய அரசு தருகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இப்பேர்ப்பட்ட நல்ல திட்டத்திற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நிதி வழங்குவதில் மத்திய அரசுக்கு ஏதாவது நிதி தருகின்றார்களா, அல்லது கட்டிடத் தொழிலாளர்கள்...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ராஜு, மத்திய அரசுக்கு நிதி உதவி என்று சொல்லக் கூடாது. மத்திய அரசு நமக்கு தருகின்றதா என்று இருக்க வேண்டும்.

முற்பகல் 10.45

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு புரட்சித் தலைவியினுடைய திட்டத்திற்கு ஏதாவது நிதி தருகிறார்களா அல்லது கட்டிடத் தொழிலாளர்களுக்காக மத்திய அரசு ஒரு சட்டம் கொண்டு வந்துள்ளதை அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.ஏ.எம்.பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு கட்டிடத் தொழிலாளர்களுக்காக இரண்டு அவசரச் சட்டங்கள் பிறப்பித்துள்ளன. ஆயினும், இதற்கான விதிமுறைகள் வகுக்கப்பெறவில்லை. விதிமுறைகள் வகுக்கப்பட்ட பின்னர் நடவடிக்கை எடுக்க இயலும். மைய அரசின் திட்டத்தில் சில குறைபாடுகள் உள்ளன. 50க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் உள்ள நிறுவனங்களில் மட்டும் மைய அரசு நலத் திட்டம் அமலாகும். மற்ற நிறுவனங்களில்

1996 பிப்ரவரி 22]

பணியாற்றும் தொழிலாளர்களுக்குப் பொருந்தாது. சொந்த வீடு கட்டுபவர்களிடமிருந்து வரி வசூல் செய்ய வகை செய்யப்படவில்லை. இந்தக் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எஸ். ஜெயக்குமார்.

திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கட்டிடத் தொழிலாளர்கள் இறந்தால், அவர்களுக்கு உதவித் தொகை வழங்க மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி ஆட்சியிலே ஆணையிட்டு இருக்கின்றார்கள் என்பதைச் சொன்னார்கள். உண்மையிலேயே பாராட்டுகின்றோம். அதே நேரத்திலே அவர்கள் கட்டிடத் தொழிலாளர்கள் தான் என ரெகக்னைஸ்-அதாவது—எப்படி நீங்கள் கண்டுபிடித்து அவர்கள் கட்டிடத் தொழிலாளர்கள்தான் — என்று நிர்ணயிக்கின்றீர்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கட்டிடத் தொழிலாளர்கள் என்று சொன்னால், மதுரை, சென்னை, கோயம்புத்தூர் போன்ற இடங்களில் ரூபாய் 25 முன்பணம் கொடுத்து பதிவு செய்து உறுப்பினர்களாக சேர வேண்டும் அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டால், அதாவது கட்டிடங்களில் வேலை பார்க்கின்றபோது விபத்து ஏற்பட்டால், அவர்களுக்கு உதவி செய்யப்படும் என்று சொன்னேன். அந்த அடிப்படையில்தான் கட்டிடத் தொழிலாளர்கள் என்னுடைய தொழிலாளர் நலத் துறை மூலம் விண்ணப்பங்களைப் பெற்று உறுப்பினராகச் சேரவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் வெ. சரோஜா.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கட்டிடத் தொழிலாளர்களுக்கென்று தனியாக வாரியம் அமைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். பாராட்டுதற்குரியது. கட்டிடத் தொழிலாளர்களுடைய நலனைக் கருத்தில் கொண்டு கட்டாயமாக கட்டிடத் தொழிலாளர்களை வரைமுறைப்படுத்தி அவர்களைக் கட்டாய இன்சூரன்ஸ் திட்டத்தில் கொண்டு வரவேண்டும் என்ற அவசியத்தை அரசு உணருமா? அதை உடனடியாகச் செயல்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கட்டிடத் தொழிலாளர்களின் துன்பங்களை நன்கு உணர்ந்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உடல்

உழைப்பு தொழிலாளர் திட்டம் உருவாக்க 1994-ல் ஆணையிட்டார்கள். விபத்து காப்பீட்டுத் திட்டம், வைப்பு நிதி, இ.எஸ்.ஐ., குழந்தைகள் காப்பகங்கள், போன்ற நலத் திட்டங்களை செயல்படுத்த தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் ஒன்றினை அரசு அமைத்துள்ளது. இந்தத் திட்டம் சென்னை, மதுரை மற்றும் கோவை மாநகராட்சிகளுக்கு தற்போது அமல்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை 19,722 கட்டிடத் தொழிலாளர்கள் ரூபாய் 25 செலுத்தி பதிவு செய்துள்ளனர். அவர்களுக்கு இன்சூரன்ஸ் செய்யப்பட்டுள்ளது. கட்டிடம் கட்டுபவர்கள் கட்டுமானப் பணியின் மொத்தச் செலவினை. 1 சதவீதம் தொழிலாளர் நல நிதிக்குச் செலுத்த வேண்டும். அப்படித்தான் அந்தத் தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கின்ற திட்டத்தினைக் கொண்டு வந்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 93, திரு.ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

93—

சிறுதொழில் கடன் தொகையைக் கூடுதலாக்குதல்

***108111*—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு நிலவள வங்கிகள் பண்ணைசாரா திட்டத்தின்கீழ் சிறுதொழில் தொடங்க வழங்கப்படும் கடன் தொகையை கூடுதலாக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.

கூட்டுறவு நிலவள வங்கிகளில் பண்ணைசாரா கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் அதாவது நான் பார்ம் செக்டார் லோன் சிறு தொழில் தொடங்க தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியின் (நபார்ட்) விதிமுறைகளுக்குட்பட்டு கடன்கள் வழங்கப்படுகின்றன. அந்த நபார்ட் எந்தெந்த காலகட்டங்களிலே விதிமுறைகளைத் தளர்த்தி கடன் தொகைகளை அதிகரிக்கலாம் என்று உத்தரவிடுகிறதோ, அந்தக் காலகட்டங்களில் எல்லாம் இந்தக் கடன்கள் அதிகமாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பண்ணைசாரா திட்டத்தின்கீழ் குறைந்தபட்சம்